1980 பிப்ரவரி 12] [பேரவைத் தலைவர்]

ஜே. அமரேந்திரன் என்று கூறிக்கொள்ளும் நபரும் பெரும் குற்றம் புரிந்துள்ளனர். அவர்களுடைய இச் செயல் பேரவையை அவமதிக்கும் பெரும் குற்றம் எள்று இப் பேரவை தீர்மானிக்கிறது.

அவர்கள் ஏழு நாட்கள் வெறுங்காவல் தண்டனை அளிக்கப் பட்டு, தண்டிக்கப்பட வேண்டும் என்று இப் பேரவை தீர்மானிக் கிறது.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்னும் 5 நிமிடங் களுக்கும் குறைவாக இருப்பதினால் உறுப்பினர் திரு. அழகிரிசாமி அவர்கள் இன்று பேச விரும்ப மாட்டார் என்று கருதுகிறேன். அதனால் பேரவையின் அலுவல்கள் இத்துடன் முடிவுற்று நாளைக் காலை 9 மணியளவில் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.26 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

7. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

—எதுவுமில்லை—

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள் ஏனைய தாள்கள்.

* 13. தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு கடன் நிவாரண (திருத்த) சட்ட முன்வடிவின் நகலுடன் அதன் இணைப்பு மற்றும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 183 ஆம் பிரிவின் கீழுள்ள விவர அறிக்கையும் (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 2/1980).

* 14. தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு வருவாய் வாரிய நீக்கச் சட்ட முன்வடிவின் நகல் (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 3/1980).

* 25. தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு கால்நடை நோய்கள் (திருத்த) சட்ட முன்வடிவின் நகலுடன் அதன் இணைப்பும் (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 4/1980).

* 16. தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகை தாரர்கள் (வெளியேற்றப்படுவதனின்றும் பாதுகாத்தல்) திருத்தச் சட்ட முன்வடிவின் நகலுடன் அதன் இணைப்பு மற்றும்

---

*8–2–1980 அன்று உறுப்பினர்களுக்கு அனுப்பப்பெற்றன.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 183ஆம் பிரிவின் கீழுள்ள விவர அறிக்கையும் (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 5/1980).

* 17. தமிழ்நாடு 1980ஆம் ஆண்டு புயல், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள பயிரிடும் குத்தகைதாரர்கள் (தற்காலிக நிவாரண) திருத்தச் சட்ட முன்வடிவின் நகலுடன் அதன் இணைப்பு மற்றும் தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவை விதிகளின் 183ஆம் பிரிவின் கீழுள்ள விவர அறிக்கையும் (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 6/1980).

* 18. தமிழ்நாடு 1980ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) திருத்தச் சட்ட முன்வடிவின் நகலுடன் அதன் இணைப்பு மற்றும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 183-ஆம் பிரிவின் கீழுள்ள விவர அறிக்கையும் (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 7/1980).

* 19. தமிழ்நாடு 1980ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) இரண்டாவது திருத்தச் சட்ட முன்வடிவின் நகலுடன் அதன் இணைப்பு மற்றும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளில் 183ஆம் பிரிவின் கீழுள்ள விவர அறிக்கையும் (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 8/1980).

* 20. தமிழ்நாடு 1980ஆம் ஆண்டு பொதுப் பொறுப்புக் கழகங்கள் (வேளாண்மை நிலங்கள் நிர்வாகத்தை முறைப் படுத்தல்) திருத்தச் சட்ட முன்வடிவின் நகலுடன் அதன் இணைப்பு மற்றும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 183ஆம் பிரிவின் கீழுள்ள விவர அறிக்கையும் (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 9/1980).

** 21. தமிழ்நாடு 1980ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகை தாரர்கள் குத்தகைப் பாக்கிகள் (நிவாரண) சட்ட முன்வடிவின் நகல் (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண், 10/1980).

** 22, தமிழ்நாடு 1980ஆம் ஆண்டு புயல், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளின் பயிரிடும் குத்தகைத்தாரர்களது குத்தகை பாக்கி (நிவாரண) சட்ட முன்வடிவின் நகல் (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 11/1980).

---

* 8-2-1980 அன்று உறுப்பினர்களுக்கு அனுப்பப்பெற்றன.

** 10-2-1980 அன்று உறுப்பினர்களுக்கு அனுப்பப்பெற்றன.

தமிழ்நாடு சட்டமன்றப்பேரவை 125ஆம் விதியில் கண்டவரம்பு நிபந்தனைக்கேற்ப மாண்புமிகு பேரவைத் தலைவரின் பேரில் வெளியிடப்பட்டது.

1980 பிப்ரவரி 12]

** 23. தமிழ்நாடு 1980ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகை தாரர்கள் (நியாய வாரம் செலுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவின் நகலுடன் அதன் இணைப்பும்.

** 24. தமிழ்நாடு 1980ஆம் ஆண்டு பொதுப் பொறுப்புக் கழகங்கள் (வேளாண்மை நிலங்கள் நிர்வாகத்தை முறைப்படுத்துதல்) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவின் நகலுடன் அதன் இணைப்பும்.

25. 27–8–1969ஆம் தேதியன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் நிறைவேறிய தீர்மானத்திற்கிணங்க கீழ்க்கண்ட சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் சொத்திருப்பு பற்றிய விவரக் கணக்குகள் பேரவைமுன் வைக்கப்பெற்றன.

31–3–1978 ஆம் தேதியன்று உள்ளவாறு.

1. மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன்
2. திரு. ர. ஜெபமணி
3. திரு. எம். அண்ணாமலை
4. திரு. துரை முத்துசாமி

31–3–1979ஆம் தேதியன்று உள்ளவாறு.

1. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்
2. மாண்புமிகு திரு. க. உ‌ஜொ. எட்மண்ட்
3. திரு. ரா. கிருஷ்ணன்
4. புலவர் கா, கோவிந்தன்
5. திரு. ந. சங்கரய்யா
6. திரு. இரா. எ. சந்திரன் ஜெயபால்
7. திரு. ர. ஜெபமணி
8. திரு. கு. ரமணி
9. திரு. துரை முத்துசாமி
10. திரு. எச். ஜி. ஆறுமுகம்
11. திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு

*** 26. உடுக்குறியிடாத வினா–விடை பட்டியல் (201 முதல் 350 வரை).

** 10-2-1980 அன்று உறுப்பினர்களுக்கு அனுப்பப் பெற்றன.
*** 11–2–1980 அன்று பேரவைமுன் வைக்கப்பெற்றன.
10-2-1980 அன்று உறுப்பினர்களுக்கு அனுப்பப்பெற்றன.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை 125ஆம் விதியில் கண்ட வரம்பு நிபந்தனைக்கேற்ப மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணையின் பேரில் வெளியிடப்பட்டது.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

வாய்மையே வெல்லும்

TRUTH ALONE TRIUMPHS